நிரூபித்த பின்னாலே பிரைமா ஃபேசி கேஸ் இருக்கிறது. அவர் ராஜினாமா செய்யமாட்டார் என்று குற்றவாளிக் கூண்டில் இருக்கிற குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பாதுகாப்பு கொடுப்பது வேடிக்கையாக இருக்கிறது, விந்தையாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய அறிக்கையை எதிர்த்து இந்த ஆட்சேபணையை எதிர்த்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் வெளி நடப்பு செய்கிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நீதி விசாரணை வேண்டுமென்று சொல்லுவார்கள், வைத்தால் ஓடுவார்கள் என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சித் தேவையே இல்லை.

3. கவன ஈர்ப்பு.

குமரி மாவட்டம் அருவிக்கரை கிராமத்திலுள்ள தச்சூர் அரிசன காலனிக்குப் போகும் பாதையை ஒரு தனி நபர் மூடியதும் வேறு ஒரு பாதை அமைக்க வேண்டியதின் அவசியமும் குறித்து

THIRU J. JAMES: Mr. Speaker Sir, I call the attention of Hon. the Minister for Harijan Welfare to a matter of urgent public importance, namely, the closure of the pathway leading to Thachoor Harijan Colony in Aruvikarai village, Kalkulam taluk, Kanyakumari district by an individual and the necessity to form a road along the pathway to the above Harijan Colony.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், அருவிக்கரை கிராமத்திலுள்ள தச்சூர் அரிசனக் காலனியிலுள்ள அரிசனங்கள் இதுகாறும் கீழ்க்காணும் மூன்று பாதைகளை உபயோகித்து வந்தார்கள்.

(1) தனியார் நிலங்களின் புல எண் 137, 107, 108 வழியாகச் சென்று கொண்டிருந்த பாதை;

(2) திருவெட்டார் உயர்நிலைப்பள்ளி சுற்று இடத்தின் வழியாகச் சென்று கொண்டிருக்கும் பாதை;

(3) அரிசனக் காலனியின் தென்புறமாகச் செல்லும் வெகுதூரமுள்ள சுற்றுப் பாதை;

உயர்நிலைப்பள்ளி நிர்வாகத்தினரால் எந்த நேரத்திலும் மூடப்படும் வாய்ப்பு உள்ளதாலும், வெகுதூரமுள்ளதாகவும், சுற்றுப்பாதையாகவும் நன்செய் நிலங்களின் வழியாகவும் தோட்டங்களின் வழியாகவும் போக வேண்டி இருப்பதாலும் மேற்கண்ட (2), (3)-ல் குறிப்பிட்டுள்ள பாதைகளை அரிசனங்கள் அதிகமாக உபயோகிப்பதில்லை. குறுகிய தூரமுள்ளதாகவும் வசதியாகவும் இருப்பதால் மேலே (1)-ல் கூறப்பட்ட தனியார் நிலங்களின் வழியாகச் செல்லும் பாதையைத்தான் அரிசனங்கள் அதிகமாக உபயோகப்படுத்தி வந்தார்கள். இப்பாதை

செல்லும் நிலச் சொந்தக்காரர்களில் ஒருவர் (புல எண் 137-ன் சொந்தக்காரர்) அந் நிலத்தில் சுற்றுச் சுவர் எடுத்து இதுகாறும் இருந்து வந்த பாதையை மூடிவிட்டார்.

அரிசனங்கள் விண்ணப்பித்துக் கொண்டதின் பேரில் தாசில்தாரும், மாவட்ட நல அதிகாரியும் மேற்படி இடத்தைப் பார்வையிட்ட பொழுது புல எண் 137-ன் சொந்தக்காரர் மேற்கண்ட பாதை அரிசனங்களின் உபயோகத்திற்காக அல்லவென்றும், திரு தேவசகாயம் என்ற தனி நபரின் உபயோகத்திற்காகவே இருப்பதால் மேற்படி நிலத்தின் ஆர்ஜிதத்திற்கு ஆட்சேபணை தெரிவித்துள்ளார். இப்பாதை அரிசனங்களுக்கு வசதியாக இருப்பதாகவும், இப்பாதை வசதி அளிப்பதற்கான ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கூறி 28—2—1975-ல் மாவட்ட ஆட்சியாளர் அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்பி உள்ளார். மேற்படி நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி மாவட்ட ஆட்சியாளர் பணிக்கப்பட்டுள்ளார். நில ஆர்ஜித நடவடிக்கைகளின் செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே இந்தக் கவன ஈர்ப்புக் குறிப்பிற்கு அவசியம் இல்லை யெனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விடுத்துள்ள ஆணைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தனி நபர் ஒருவர் அரிசன மக்கள் நீண்ட நாட்களாக உபயோகித்து வந்த பாதையைச் சுற்றிலும் மதில் சுவர் எழுப்பி தடைப்படுத்தினதால் சென்ற 4, 5 மாதங்களாக அரிசன மக்கள் வெளியே செல்வதற்கு வழி இல்லாமல் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். இப்படி அவர்கள் சிறைவாசத்தை அதிக நாள் நீடிக்காமல் உடனடியாக விமோசனம் அளிக்கிற வகையில் அமைச்சரவர்கள் விடுத்துள்ள ஆணைப்படி அந்த நிலத்தை உடனடியாக ஆர்ஜிதம் செய்வதற்கும் அவர்களுக்கு வழிப் பாதை அமைத்துக் கொடுக்கவும் கலெக்டர் அவர்களுக்கு உத்திரவு பிறப்பிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தலைவரவர்களே, இப்போது தான் ஒரு வாரத்திற்கு முன்னால், இந்த நோட்டீஸ் வந்ததற்குப் பிறகு உடனடியாக பாதை போடும்படியாக அரசு, ஆட்சியாளருக்கு ஆணை பிறப்பித்துள்ளது.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, குடியிருப்புதாரர்கள் (வெளியேற்றப் படுவதி னின்று பாதுகாத்தல்) மறு சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.